# மத்திய கிழக்கில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினை தோற்கடி!

அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் பிரித்தானிய, ஜேர்மனிய, யப்பான், பிரான்ஸ் ஏகாதிபத்தியங்களது ஆதரவினை திரட்டிய வண்ணம், ஈராக்கிற்கு எதிராகவும் மத்திய கிழக்கினை ஆக்கிரமிக்கவும் தொடுத்துள்ள பாரிய யுத்த மிரட்டலை நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், வன்மையாக கண்டிப்பதுடன் ஏகாதிபத்திய யுத்தத்திற்கு எதிராக எழுச்சியுறுமாறு இலங்கைத் தொழிலாள வர்க்கத்திடமும் உலக தொழிலாள வர்க்கத்திடமும் வேண்டுகின்றது.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் வழங்கிய பெயரளவிலான சுதந்திரம் என்றதன் பின், பின்தங்கிய நாடுகளின் மீது புதிய கொடிய காலனித்துவ ஆட்சியை சுமத்தவும். உலகினை மீண்டும் பங்கீடு செய்யவும் ஏகாதிபத்திய வாதிகள் எடுக்கும் பிரயத்தனங்களின் ஆரம்ப அறிகுறியினை இந்த அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளது மத்திய கிழக்கு இராணுவ தலையீடு சுட்டிக் காட்டுகிறது.

சாட்டாக ஈராக் குவைத்தில் தலையிட்டதை முன்வைத்து அமெரிக்க ஏகாதிபத்தியம் மத்திய கிழக்கு எண்ணெய் வளங்களின் ஆதிக்கத்தை தம் கையில் கைப்பற்றும் நீண்டகால தயாரிப்பினை செயற்படுத்தியுள்ளது.

அமெரிக்க சோவினிச ஜோர்ஜ் புஷ் அரசாங்கமும், ஏனைய ஏகாதிபத்தியவாதிகளும் முதலாளித்துவ பத்திரிகைகளும் ஈராக்கினை அன்றைய நாஜி ஜேர்மனிக்கும், சதாம் குசேனை அடோல்ப் ஹிட்லரின் புதிய அவதாரமெனவும் மேற் பூச்சிட்டு காட்டுகின்றன. எனினும் உண்மையில் இப்பிரதேசம் பூராகம் ஏகாதிபத்திய ஆதிக்கத்தை நிலைநாட்டுமுகமான ஆக்கிரமிப்பொன்றிற்கு கீழ்ப்பட்டுள்ளது ஈராக்கே ஆகும். ஈராக் உண்மையில் மிகச் சிறிய இராணுவ பலம் குன்றிய ஓர் நாடாகும். வோல்ட்ஸ்ரீட் சஞ்சிகை மத்திய கிழக்கில் ''அராபிய மயத்தினை நசுக்கும் முகமாக அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஈராக்கிற்கெதிராக போராடியே தீரவேண்டுமென கூறுகின்றது.'' இந்த நோக்கினை அடைய லட்சோபலட்ச அராபிய மக்களை பூண்டோடு அழித்தொழிக்க வேண்டும். பிரித்தானிய யுத்த தீர்க்கதரிசனவாதிகள் மத்திய கிழக்கில் யுத்தம் சில தினங்களில் அல்லது சில வாரங்களில் முடிவு கட்டப்படுமென கூறுகின்றனர். இது மீண்டும் முழு அராபிய உலகினையும் அழித்து விடுமுகமான ஏகாதிபத்திய தயாரிப்பினையே பிரதிபலிக்கின்றது

நான்காம் அகிலத்தின் அனைத்துலககுழுவும் அதன் கிளைகளும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இந்த அழிவுகார யுத்த தயாரிப்புக்கு எதிராக உலக தொழிலாள வர்க்கத்தை அணிதிரட்டப் போராடுகின்றன. அது ஏகாதிபத்திய ஒடுக்குமுறை தாக்குதலுக்கெதிராக ஈராக்கினை பேணுகிறது எனினும் சதாம் குசேனுக்கோ அராபிய வாத சோசலிச கட்சி அரசியலுக்கோ எதுவித ஆதரவினையும் வழங்கவில்லை. சதாம் குசேனின் ஈராக்கிய அரசாங்கம் குவைத்தினை இணைத்துக் கொண்டதற்கோ நாம் எதுவித ஆதரவையும் வழங்கோம். அதனை எந்தவொரு முற்போக்கு செயலாகவும் நாம் கருதப்போவதுமில்லை.

ஈராக் குவைத்தை ஆக்கிரமித்தது அராபிய உலகினை ஐக்கியப்படுத்தவோ, உலகயுத்தத்தின் பின்னைய அமைப்பிற்கு சவாலிடும் செயல் ஒன்றோ அல்ல. சதாம் குசேன் தனது பிரதேச எதிர்ப்பாளருக்கும் சுய ஏகாதிபத்திய எசமானர்களுக்கும் ஈராக்கிய முதலாளித்துவ வர்க்கத்தின் அரசியல் செல்வாக்கினை பலப்படுத்தி காட்டவே முயற்சிக்கிறார்.

குவைத்தை பொறுத்தமட்டில் சுயநிர்ணய உரிமை என்ற பேச்சுக்கிடமில்லை மார்க்ஸிஸ்டுகள் கூறுமளவுக்கு தேசிய இனம் என்றது பற்றிய எந்தவொரு லட்சணமுமே குவைத்துக்கு கிடையாது. குவைற் எனும் நாடு பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளால் மத்திய கிழக்கிலிருந்து துண்டாடப்பட்டு அமைக்கப்பட்ட காலனியொன்றாகும். அது உருவாக்கப்பட்ட நாளிலிருந்து ஏகாதிபத்தியதாலேயே பராமரிக்கப்பட்டு வந்துள்ளது.

வரலாற்று ரீதியில் பார்ப்பின் குவைத் முஸ்லிம் ஆட்சியாளரின் பகுதி துருக்கி ஆட்சியாளரின் கீழான பஸ்ராபிரதேசத்தின் பிரிவொன்றாகும் அது தெற்கு ஈராக்கின் ஒரு பிரிவாக பல ஆண்டுகளாக ஆளப்பட்டு வந்துள்ளது.

1932ல் ஈராக் பிரித்தானியாவிலிருந்து பெயரளவில் சுதந்திரம் என்றதை பெற்ற நாடாகியது. எனினும் பலவீனமான இந்த நாட்டில் ஆட்சியதிகாரத்தை உண்மையில் பிரித்தானியாவே நடத்தி வந்தது. அதே சமயம் அமீர்களின் ஆட்சியின் கீழாக குவைற் வேறு ஓர் அரசாக செயற்பட்டது. 2ம் உலக யுத்தத்தின்பின் குவைத்தில எண்ணெய் வளங்கள் கண்டுபிடிக்கப்பட்டபின் அமீர் பிரித்தானிய அமெரிக்க எண்ணெய் கம்பெனிகளின் பிரதானமான ஏஜந்தாக உலகின் மிக செல்வந்தவனுக ஒருவராக மாறினான்.

1961ல் குவைற்றின் நிலயானிய முறை ஆட்சியானது வர்த்தக குடும்பங்கள் பலவற்றை உள்ளடக்கியிருந்தது. அவர்கள் அமெரிக்க, பிரித்தானிய யப்பான், வங்கிகளின் டொலர் மில்லியன்களை ஆயிரக்கணக்கில் மடியில் கட்டிக் கொண்ட பணக்கார குடும்பங்களாவார்கள். இந்த நிலமானித்துவ சமூக தட்டினையோ, அல்லது ஏகாதிபத்தியவாதிகளது தேவைக்காக கட்டியெழுப்பட்டும் குவைற்நாட்டு எல்லைகள் பற்றியதையோ பேணும் பிரச்சினை மார்க்ஸிஸ்டுகளுக்கும் உலக தொழிலாள வர்க்கத்திற்கும் கிடையாது

மார்க்சிஸ்டுகளதும் தொழிலாள வர்க்கத்தினதும் பொறுப்பாயுள்ளது யாதெனில் ஏகாதிபத்தியவாதிகளால் தேசஎல்லைகள் வேறுபடுத்தப்பட்டமைக்கப்பட்ட முதலாளித்துவ, நிலமானித்துவ அமைப்புகளை தூக்கியெறிந்த, ஜனநாயக ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்தின் தொழிலாள வர்க்க தலைமையை கட்டியெழுப்புவதேயாகும்.

பலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பாகவோ அராபிய இனத்தின் பிரச்சினை தொடர்பாகவோ, தொழிலாள வர்க்கத்தின் தலைமையின் கீழான ஐக்கிய அராபிய சோசலிச குடியரசு ஒன்றை அமைப்பதே பதிலாக விளங்குகிறது.

ஏகாதிபத்தியத்தின் யுத்த தயாரிப்புடன, சோவியத், சீன ஸ்டாலினிச அதிகாரத்துவம், கபிரோ அதிகாரத்துவமும், பல்லாண்டுகளாக சியோனிசத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்குகெதிராக பெற்ற அறிக்கைகளை மட்டும் வெளியிட்டதுடன் எகிப்திய, சிரியா ஏனைய அரபு நாடுகளது அரசாங்கங்களும், ஏகாதிபத்தியத்துடன் அணிதிரண்டுள்ளன,

ஏகாதிபத்திய விபசாரவிடுதியான ஐக்கிய நாடுகள் சபை அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு உடனடியாக ஆதரவளித்து ஈராக்கிற்குகெதிரான பொருளாதார தடைகளை விதித்தன. நிறபேத அனைத்துவேச தென்னாபிரிக்க அட்சியாளருக்கு கெதிரான விதித்த பொருளாதார தடைகளைபோல சிறியளவிலான பொருளாதார தடைகளை விதித்தபோது இஸ்ரேல் தடை உத்தரவை மீறிய போதும் மௌனம்சாதித்ததும் இந்த பொருளாதார தடை விதித்த ஐக்கிய நாடுகள் சபையே ஆம்.

ஈராக்கிற்கெதிரான ஐக்கிய நாடுகள் சபை பொருளாதார தடைகளுக்கு சோவியத், சீன அதிகாரத்துவங்கள் ஆதரவளித்துள்ளன. பின் சோவியத் வெளிநாட்டமைச்சர் எலு வர்டே பு. க. க. சேயும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கரும் ஈராக்கிற்கெதிரான ஓரே கூட்டு அறிக்கையில் கைச்சாத்திட்டனர். வளைகுடாவில் அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு முக்கிய பக்கபலமாக இதுவே விளங்கியது

ஸ்டாலினிச அதிகாரத்துவம் முதலாளித்துவத்தை புனரமைக்க தற்போது செய்யும் நடவடிக்கைகளுடன் ஒன்றிணைந்து அரைக் காலனித்துவ நாடுகளில் ஏகாதிபத்திய தலையீட்டுக்கு எதிர்ப்பாளர் என்று முன்பு எடுத்துகாட்டி வந்த பிரமைகளை கூட கைவிட்டுள்ளன, கெய்ரோ அதிகாரத்துவ அமெரிக்க ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கான சட்டரீதியான மூடிமறைப்பினை வழங்கி ஐக்கிய நாடுகளது பொருளாதார தடைக்கு ஆதரவாக வாக்களித்துள்ளது. ''அல்லது வாக்கெடுப்பிலிருந்து விலகியுள்ளன''.

இவ்விதத்தில் இந்த ஏகாதிபத்திய ஏஜந்துகள் விசேடமாக சோவியத், சீன அதிகாரத்துவங்கள் ஏகாதிபத்திய மூலதனத்தின் யுத்தவேட்கைக்குள் அணிதிரண்ட வண்ணம் த்தலைமை அரசியல் பொறுப்பை தமது தோள்களில் சுமந்து கொண்டுள்ளன.

உலக ஏகாதிபத்திய நெருக்கடி முன்னேரு போதுமில்லாதளவு உக்கிரம் கண்ட வேளையிலேயே வளைகுடா நெருக்கடி உருவாகியுள்ளது அமெரிக்க ஆளும் வர்க்கமானது. யப்பானிய, ஜேர்மனிய போட்டியாளர்களின் பொருளாதார ஆதிக்கத்தை இழந்துள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியமானது உலக ஆதிக்கத்தை மீண்டும் கைப்பற்றி கொள்ளும் பொருட்டு தமக்கு தற்போதுள்ள மேலாதிக்க இராணுவபலத்தை வெளிக் காட்டியுள்ளது.

ஈராக்கிற்கெதிராக ஆரம்பத்தில் ஏகாதிபத்தியவாதிகளிடையே ஒற்றுமை காணப்படினும், வளங்களை சூறையாடும் பிரச்சினையின் போது அவர்களிடையே மோதல்கள் தவிர்க்க முடியாதவாறு ஏற்படும் இது நிச்சயமாக உலக ஏகாதிபத்தியம் உலக யுத்தமொன்றிற்கு உலகினை தள்ளிவிடும் ஏகாதிபத்தியம் 2ம் உலக யுத்தத்தின் பின் தனது அமைப்பை பேண தற்காலிகமாக அமைத்த யுத்தத்தின் பின்னரான சமநிலை தகர்ந்து போயுள்ளது ஏகாதிபத்திய தேவைக்கேற்ப சமநிலையை ஏற்படுத்துவது என்பது, உலக தொழிலாள வர்க்கத்தினையும், ஒடுக்கப்பட்ட மக்களையும் முற்றாய் ஒழித்துவிடும் உலக யுத்தமொன்றின் மூலமே மட்டும்சாத்தியமாகும். இதற்கு மாற்றீடாக ஏகாதிபத்திய அமைப்பினை துடைத்து கட்டி, உலக சோசலிச வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக்குவதே விளங்குகிறது நான்காம் அகிலத்தின் அனைத்துலககுழுவும் அதன் இலங்கை கிளையான பு. க. சழகமும் இந்த வேலைத்திட்டத்தினையே தம் அடிப்படையாக கொண்டுள்ளன.

இலங்கையின் யூ. என். பி அரசாங்கம் மத்திய கிழக்கின் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு வழங்கி வரும் ஆதரவை திட்டவட்டமாக கண்டிக்கிறது. அமெரிக்க ஏகாதிபத்திய தலையீட்டிற்கு எதிர்ப்பு வழங்குமாறும், யூ. என். பீ. அரசாங்கம் அதற்களிக்கும் கேவலமான ஆதரவை நிறுத்துமாறும், கூட்டம் மறியல் போராட்டம், மூலமாக இதற்கெதிராக பிரசாரம் செய்யுமாறும் பு. க. சழகம் வேண்டுகின்றது.



சவூதி அரேபியா — குவைத் தேச எல்லையில் டாங்கிகள், ஏவுகணைகள் சகிதம் குவிக்கப்பட்டுள்ள அமெரிக்க கடற்படை.

சோசலிச புரட்சியின் உலகக் கட்சியை கட்டி எழுப்புங்கள்!

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்**

பெயர் : ..............................

..............................

முகவரி : ..............................

..............................

கழகத்தைப் பற்றி மேலும் விபரங்கள் பெற நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்ப வேண்டிய முகவரி :

தேசிய செயலாளர்,
புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்
இல : 90, 1 - ஆவது
மாளிகாகந்தை ஒழுங்கை
கொழும்பு - 10.

